# DEPOSITION OF WITNESS

## (Chapter XXIII Code of Criminal Procedure)

## IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE OF KARUR.

| | | |
|---|---|---|
| Sessions Case No. | : | 17/2021 |
| | : | Prosecution - **DW-1** |
| Deposition of witness for | : | Defense |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | கார்த்திக்குமார் | Father's Name | : | பெரியசாமி |
| Village | : | | Taluk | : | |
| Caste | : | | Calling | : | |
| Religion | : | | Age | : | |

Solemnly affirmed in accordance with the Provisions of Act 44 of 1979 of the 02nd day of July 2025.

**(**குற்ற இறுதியறிக்கையில் உள்ள வரிசைப்படி எதிரிகள் வரிசைப்படுத்தப்பட்டுள்ளனர்**.** **1** ம் எதிரி கோகுலகிருஷ்ணன் **(**எ**)** கோகுல், **2** ம் எதிரி துரைப்பாண்டி **(**எ**)** பாண்டி**, 4** ம் எதிரி மணிகண்டன் **(**எ**) R.S.**மணி**, 5** ம் எதிரி ரமேஷ் **(**எ**)** காவியாரமேஷ்**, 8** ம் எதிரி தமிழரசன்**, 9** ம் எதிரி அஜீத்குமார்**, 10** ம் எதிரி செந்தில் **(**எ**)** செந்தில்ஈஸ்வரன்**, 11** ம் எதிரி கலைச்செல்வன்**, 12** ம் எதிரி விமல் பஷீர் ஆகியோர் முன்னிலையாகியுள்ளனர்**.**

**1** ஆம் எதிரி**, 2** ஆம் எதிரி**, 3** ஆம் எதிரி**, 4** ஆம் எதிரி ஆஜர்படுத்தப்பட்டனர்**. 5** முதல் **11** எதிரிகள் ஆஜர்**.**

**3** ம் எதிரி இவ்வழக்கிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டு, அவருக்கு எதிரான சிறப்பு வழக்கு **SPL.SC. 11/2023** நிலுவையில் இருந்து வருகிறது**)**

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது சோமூரில் குடியிருந்து வருகிறேன். சோமூர், கரூரிலிருந்து 15 கி.மீ., தொலைவில் உள்ளது. நான் டெக்ஸ்சில் அக்கவுண்ட்சில் பணி செய்கிறேன். ஆஜர் 7 ஆம் எதிரி அரவிந்த்தை எனக்கு தெரியும். அவர் என்னுடன் பணிசெய்தார். கடந்த ஐந்து வருடங்களாக நானும், ஆஜர் எதிரி அரவிந்தும் ஒன்றாக வேலை செய்தோம். அவர் மிசன் ஆப்ரேட்டராக பிரிண்டிங் துறையில், கணிணியில் டிசைன் வேலை செய்தார். சோமூரில் இருந்து காலை 8.15 மணிக்கு ஆஜர் எதிரி அரவிந்த் வீட்டிற்கு சென்று அவரது வீட்டிற்கு 8.30-8.45 மணியளவில் அவரது விட்டிற்கு செல்வேன். நான் பணிபுரியும் இடம் குள்ளம்பட்டியில் உள்ளது. மேற்படி குள்ளம்பட்டி ஆஜர் எதிரி அரவிந்த் வீட்டில் இருந்து 12 கி.மீ., தொலைவில் உள்ளது. 18.09.2020 அன்று 8.45 க்கு ஆஜர் எதிரி அரவிந்த் வீட்டில் இருந்து குள்ளம்பட்டிக்கு நான் இரு சக்கர வாகனத்தில் நான் ஓட்ட, அரவிந்த் என் பின்னால் அமர்ந்து வந்தார். குள்ளம்பட்டிக்கு பணிக்கு 18.09.2020 அன்று 9.05 முதல் 9.15 க்குள் சென்றுவிட்டோம். அதன் பிறகு கம்பெனியில் அரவிந்த்தை டீ குடிக்கும்போது பார்த்தேன். அப்போது மதியம் 11 மணி இருக்கும். அதன் பிறகு உணவு இடைவேளையின்போது மதியம் 1.30 மணிக்கு அரவிந்த்தை பார்த்தேன். அதன் பிறகு மீண்டும் 4.30 மணிக்கு அரவிந்தததை பார்த்தேன். அதன்பிறகு இரவு 7 மணிக்கு அரவிந்த் வீட்டிற்கு சென்றார், நான் என் வீட்டிற்கு சென்றேன். அரவிந்த்தை 28.09.2020

ஆம் தேதி மதியம் அலுவலகத்திற்கு வந்து அரவிந்த்தை காவல் துறையினர் அழைத்து சென்றனர். டிசைன் பிளஸ் பிளஸ் என்ற கம்பெனியில் நானும், அரவிந்த்தும் பணிபுரிந்தோம்.

<u>மற்ற எதிரிகளுக்கு குறுக்கு விசாரணை</u>

இல்லை.

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u>

11.09.2017 ஆம் ஆண்டில் இருந்து நானும், அரவிந்தும் ஒன்றாக வேலை செய்கிறோம். நான் தற்போது அங்கு வேலை செய்யவில்லை. ஒவ்வொரு நாளும் என்ன என்ன செய்தீர்கள் என்று உங்களுக்கு ஞாபகம் இருக்குமா என்றால் முக்கியமான நிகழ்வுகள் எனக்கு ஞாபகம் இருக்கும். 18.09.2020 ஆம் தேதியில் நடந்த விபரத்தை உங்களுக்கு எப்படி ஞாபகம் வந்தது என்றால் 28.09.2020 அன்று அரவிந்த்தை காவல் துறையினர் அழைத்து சென்றதால் 18.09.2020 ஆம் தேதி நடந்த நிகழ்வுகள் எனக்கு ஞாபகம் வந்தது. அரவிந்த்தை காவல் துறையினர் எந்த காரணத்திற்காக அழைத்து சென்றார்கள் என்ற விபரம் உங்களுக்கு தெரியாது என்று சொன்னால் சரிதான். நீங்கள் காவல் துறையினரை ஏன் அரவிந்த்தை அழைத்து சென்றீர்கள் என்று கேட்டீர்களா என்றால் இல்லை. உங்களுக்கு எட்டு வருடங்களுக்கு முன்பு என்ன நடந்தது என்று தற்போது உங்களுக்கு ஞாபகம் இருக்க வாய்ப்பில்லை என்று சொன்னால் சரியல்ல. ஆஜர் எதிரி அரவிந்த் வழக்கிற்காக உங்களை பொய்யாக சாட்சியம் அளிக்க

வைத்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல. அரவிந்த் எனக்கு நண்பர். உங்கள் நண்பரை காப்பாற்றவேண்டி நீங்கள் பொய்யாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல.

நீதிமன்ற கேள்வி

டிசைன் பிளஸ் பிளஸ் நிறுவனத்தில் மொத்தமாக எத்தனை நபர்கள் வேலை செய்கிறார்கள் என்றால் நான் பணி செய்யும்போது 130 நபர்கள் வேலை செய்தார்கள். மேற்சொன்ன நிறுவனத்தில் நான் பணியில் இருக்கும் போது எங்களுக்கு அடையாள அட்டை வழங்கினார்கள். நாங்கள் ஒவ்வொரு நாளும் பணிக்கு செல்லும்போது கைரேகை (Bio-Matric) வைத்துதான் பணிக்கு செல்வோம். அதேபோல் பணிக்கு சென்றுவிட்டு மீண்டும் வெளியே வரும்போது Bio Matric ல் கைரேகை வைத்துதான் வெளியே வரவேண்டும். 20 நாட்களுக்கு 1 நாள் CL விடுப்பு உண்டு, மற்ற நாட்களுக்கு பணி செய்யும் நாட்களுக்கு மட்டும்தான் சம்பளம் கிடைக்கும். CCTV கேமரா 18.09.2020 அன்று மேற்சொன்ன நிறுவனத்தில் இயங்கி வந்தது.

ஒம்/.K.H.இளவழகன்
முதன்மை மாவட்ட நீதிபதி,
கரூர்.